**புலம்பெயர்ந்தோர் வலைப்பின்னலின் அறைகூவல்**

**AfD எங்களைத் தாக்குகின்றது!**

இனவெறியார்களால் வழிநடத்தப்படும் AfD கட்சியினர் தமது அடுத்த தேசிய கட்சி மாநாட்டை எசன் நகரில் நடத்தத் திட்டமிட்டுள்ளனர்: 28. - 30. ஆனி வரை அவர்கள் தமது நாடுகடத்தும் திட்டம் மற்றும் நாசி-பிரச்சாரத்தை மேலும் விரிவுபடுத்த விரும்பியுள்ளனர். அதுவும் இந்த நகரம் றுார் பிரதேசத்தின் மத்தியில், புலம்பெயர்ந்து வாழும் மக்களின் 40% வரலாற்றைக் கொண்ட பகுதியாகும். எல்லாவற்றுக்கும் மேலாக இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு தொடக்கம் இந்த நாட்டைக் கட்டியெழுப்பி இன்றுவரை யேர்மன் நாட்டின் பொருளாதார வளத்திற்கு உத்தரவாதம் கொடுத்துவரும் மக்களின் முகத்தில் விழும் அறையாகும்.

AfD அதன் இனவெறி அரசியலைப் பயன்படுத்தி, முன்னாளில் ஹிட்லரைப் போன்று, அடையாளம் காணப்பட்ட வலதுசாரி தீவிரவாத நாசிக்களுடன் நாடாளுமன்றில் அதிகாரத்தைக் கைப்பற்ற விரும்புகிறது. சரியான-ஆய்வுகள் வெளியானது தொடக்கம் AfD அடுத்து என்ன நடவடிக்கைகளைத் திட்டமிடுகிறது என்பது தெளிவாகத் தெரிகின்றது: இங்கு வாழும் மில்லியன் கணக்கான மக்களை, எமது சகோதர சகோதரிகளை, எமது பெற்றோரை, எமது பாட்டன் பாட்டிகளை, எமது நண்பர்கள் மற்றும் நண்பிகளை - நாடு கடத்துவது.

இதை நாங்கள் அனுமதிக்கப்போவதில்லை! நாங்கள் யேர்மனியை எமது தாயகமாகக் கொண்டுள்ளோம், யேர்மனியில் வேறு எந்தப் பிரதேசங்களிலும் இல்லாத வகையில் நாங்களும் எங்கள் குடும்பங்களும் வடிவமைத்த றுார் பகுதியின் வீதிகளை, யேர்மன் சட்டவாக்கப் பாதுகாப்பால் „வலதுசாரித் தீவிரவாதிகள்" என பட்டியலிடப்பட்ட நாசிக்கள் கையகப் படுத்துவதைத் தடுக்க வேண்டும். AfD எமது நாட்டையும் யேர்மன் அரசியலையும் அதன் திணைக்களங்களையும் மேலும் மேலும் வலதுசாரிகளாக மாற்றுவதையும், புலம்பெயர்வதற்கான மனித உரிமையை நீக்கி, எமது சமூகத்தின் மீதான தாக்குதல்களைத் தொடர்ந்தால் அவற்றை நாம் பார்க்காமல் மறுபக்கம் திரும்பியிருக்கப் போவதில்லை.

**நாம் எம்மைத் தற்காத்துக் கொள்ள வேண்டும்.**

AfD தமது கட்சி மாநாட்டை, அவர்களது ஜனநாயக விரோதக் கொள்கைகள் மற்றும் எங்களுக்கு எதிரான இனவெறிக் கோஷங்களுடன் எம்மை எதிர்த்து நடத்த விடக்கூடாதென்பதே எமது குறிக்கோள். இதை அடைவதற்கு, ஒருவர் ஒருவரை ஆதரிக்கும் பல்வேறு நடவடிக்கைகள் உள்ளன:

**பாரிய மக்கள் ஆர்ப்பாட்டம்:**

நாங்கள் AfD க்கு எதிரான மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்பதுடன் கட்சி மாநாடு நடைபெறும் நாட்களில் அந்த இடத்தில் ஆர்ப்பாட்டங்களை அணிதிரட்டுவோம். அவ்வாறு எமது எதிர்ப்பைக் காட்டுவதன்மூலம் AfD தனது இனவாத அரசியலை எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் பரப்புவதைத் தடுக்க முடியும் என்பதை உறுதிப்படுத்த நாங்கள் உதவுவோம்.

**ஆக்கபூர்வமான செயற்பாடுகள்:**

AfD எங்களை நாடுகடத்த விரும்புவதால், அதற்கு எதிராக சாதாரணமாக ஆர்ப்பாட்டம் நடத்தினால் மட்டும் போதாது. AfD இனவெறியாளர்களால் வழிநடத்தப்படும் ஒரு கட்சி. அவர்களிடமிருந்து அனைத்து இடங்களும் பறிக்கப்பட வேண்டும். அதனால்தான் நாங்கள் AfD யின் ஜனநாயக விரோத தேசிய மாநாட்டை வண்ணமயமான, ஆக்கபூர்வமான செயற்பாடுகளுடன் எதிர்விளைவுகளை ஏற்படுத்த விரும்புகிறோம். இதன்மூலம் எம்மையும், எம் உறவினர்களையும், நண்பர்களையும் பாதுகாத்துக்கொள்வோம்.

நாங்கள், யேர்மனியில் புலம்பெயர்ந்து வாழும் சமூகமாக அறைகூவல் விடுக்கிறோம்: நாங்கள் ஒன்றுசேர்ந்து வீதிகளில் இறங்குவோம். உங்கள் பிள்ளைகள் தொடக்கம் தாத்தா பாட்டி, மாமி, மாமா, அயலார், நண்பர்கள் மற்றும் சக ஊழியர்களோடு பேருந்தை நிரப்புங்கள். சொந்தமாகப் பேருந்துகளை பதிவுசெய்யுங்கள். எசனுக்கு வந்து இனவெறி AfD க்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளுங்கள்! அனைவரும் ஒன்றுசேர்ந்து, தோளோடு தோள் சேர்த்து இரண்டாவது நாசி-யேர்மனிக்கு எதிராக எமது எதிர்ப்பைக் காட்டுவதுடன், ஒரே தாயகத்தில் பாதுகாப்பாக மற்றும் மனிதமாண்புடன் வாழ்வோம்!